**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : CC.No. 348/2018</u>**

**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தர்மராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மாயாண்டி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | ஸ்ரீவில்லிபுத்தூர் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 30.07.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது இராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 25.09.2017ம் தேதி, 18.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, சுப்பிரமணியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.186/2017, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

நீதிமன்றத்திற்கு முதல்தகவல்அறிக்கை 9 நாட்கள் கழித்து வரப்பெற்றுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நாளில், நேரத்தில் புகார்தாரரிடமிருந்து எந்த புகார் மனு எதுவும் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. P.Karthikeyan, Junior Assistant, முதன்மை மாவட்ட நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.31 13:11:02 +0530